பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.134 நாள்: 17.10.2017

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திருமதி.எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் இன்று (17.10.2017) அம்பத்தூர் மண்டலம், கோட்டம்–85, அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதி, 3வது தெருவில் ஆய்வு செய்ததில், R.C. DAS Engineering Company, KKR Metals Component Company மற்றும் Lion Plastics ஆகிய தொழிற்சாலைகளில் கொசுப்புழு உற்பத்தி மற்றும் கொசுப்புழு உற்பத்திக்கு ஏதுவான தேவையற்ற பொருட்கள் இருந்தது கண்டறிப்பட்டது.

அதன்மூலம், பொதுமக்களுக்கு டெங்கு, மலேரியா மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்களை ஏற்படுத்துவதோடு, பொதுமக்களுக்கு பொது சுகாதார சீர்கேடு ஏற்படுத்திய காரணத்தினால், தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் (1939) பிரிவு (44)ன்படி அது ஒரு தொல்லையாக இருக்கிறது என்பதாலும், அந்தக் கட்டிடத்திலும் அதனைச் சுற்றிலும், அதற்கு அருகாமையிலும் வசிக்கும் மக்களின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் சூழ்நிலை உருவாக்கியதாலும், அந்த தொழிற்சாலைகளுக்கு ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) அபராதத்தொகை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பெருநகர சுகாதார அலுவலர் மரு.என்.ஏ.செந்தில் நாதன், மண்டல அலுவலர் திரு.ஆர்.பாலசுப்ரமணியன் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், தீவிர கொசு ஒழிப்பு பணியில் இன்று (17.10.2017) 200 கோட்டங்களிலும், 1 கோட்டத்திற்கு 1 குழு வீதம் மொத்தம் 200 குழுக்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பணியில் 1820 மலேரியா பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த மலேரியா பணியாளர்களை கொண்டு 1,22,320 வீடுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 582 வீடுகளில் உள்ள கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டன. 239 கொசு மருந்து அடிக்கும் கைத்தெளிப்பான்களும், 176 கையினால் புகை பரப்பும் இயந்திரங்களும், 39 வாகனம் மூலம் புகைப்பரப்பும் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் சம்பந்தமாக விழிப்புணர்வு எற்படுத்துவதற்காக 143 இடங்களில் கொசுப்புழுக்கள் உருவாகும் விதங்கள், அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து கண்காட்சி அமைத்து விளக்கப்பட்டது. 127 அரசு அலுவலகங்களில் ஆய்வு செய்யப்பட்டு, கொசுப்புழு இருந்த கட்டிடங்களில், கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு விழிப்புணர்வு எற்படுத்தப்பட்டது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**